# பொலிசார் சுட்டதில் 2 பேர் மரணம்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தந்தி ரெட்டி எண் : 49
போன் 889

ஏடு 9
இதழ் 105

National Tamil Daily — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 13 ஸபர் 16 சனிக்கிழமை [27-5-67]

## ஜபல்பூரில் ஊரடங்குச் சட்டம்

புதுடில்லி, மே 26

மத்திய இந்தியாவிலுள்ள ஜபல்பூர் நகரில் இன்று கலவரங்களில் இறங்கிய ஒரு கும்பலின் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் 2 பேர் மாண்டதாகவும் ஏராளமானவர்கள் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. 75 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ராஜ்ய உணவு கொள்கையை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதனால் பொலிசார் பலரும் காயமடைந்தனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

## எம். ஜி. ஆர்— எம். ஆர். ராதா வழக்கு

4-ம் பக்கம்

# புதிய கல்வி மசோதா மந்திரிகள் பரிசீலனை

## போதனுமொழி அம்சத்தில் கருத்துவேறுபாடு?

கொழும்பு, வெள்ளி

தேசிய கல்விசிரமைப்புக்கென கல்விமந்திரியினல் தயாரிக்கப்பட்டுள்ள புதிய மசோதாவை இன்று மந்திரிசபை ஆராய்ந்தது.

இந்த மசோதாவில் போதனமொழி சம்பந்தமான கல்விமந்திரியின் திட்டத்தை சில மந்திரிகள் எதிர்த்ததாகவும, மற்றும சிலர் ஆதரித்ததாகவும அறியப்படுகின்றது.

கல்விபோதனே தமிழ் அல்லது சிங்களத்திலேயே இருக்கவேண்டும்என்றும் ஆனல் பெற்ருர் விரும்பினல் இந்த மொழிகளில் ஒன்றை தமது பிள்ளைகளின்போதனமொழியாக தெரிவுசெய்து கொள்ளலாமென்றும் கல்விமந்திரியின் வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் புதிய கல்விமசோதாவின் போதனமொழி அம்சம்குறித்து மந்திரிகளுக்கிடையில் கருத்துவேறுபாடு நிலவியதாகத் தெரிகின்றது.

போதனமொழியை பெற்ருரே தெரிவுசெய்துகொள்ளலாம் என்றுசிலமந்திரிகளும் அந்தஉரிமை பெற்ருேருக்கு கொடுக்கப்படக் கூடாது என்று சில மந்திரிகளும் அபிப்பிராயம் தெரிவித்ததாகவும் அறியப்படுகின்றது. தாய்மொழியே போதனமொழியாக இருப்பின் மாணவர்கள் சிறந்த முறையில் கல்விபெறமுடியும் என்று சில மந்திரிகள் கருத்து தெரிவித்திருக்கிருர்கள். மசோதாவின்பல்வேறு அம்சங்களையும் மந்திரிகள் ஆராய்ந்தனர். முடிவு எதுவும் டுடுக்கப்படவில்லை. மந்திரிசபையின் அடுத்த கூட்டத்தில் மீண்டும் கல்வி மசோதா ஆராயப்படும்.

## 1-ம்எதிரிக்கு3வருடகடுழியம்; 2-ம் எதிரி விடுதலை

### சரசாலை கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

1ம் எதிரி வடலிக்குள்ளிருந்து வந்து காடு வெட்டும் கத்தியால் இறந்தவரின் வலதுபக்கக் கழுத்தில்வெட்டினர். 2ம் எதிரிஎனதுஇடது முழங்கையில் பாளை சீவும் கத்தியால் வெட்டினர்.

சரசாலை கொலை வழக்கில் சாட்சியமளித்த வேலன் கணேசன் மேற்கண்டவாறு கூறினர். இவ் வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் சரசாலையில் 66 ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி கந்தன் சின்னத்தம்பியைக் கொலை செய்ததாக வல்லி கந்தன், சின்னக்குட்டி வேலன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே.வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் கனகன

[6-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் அறிஞர் ராஜமாணிக்கனர் காலமானர்

சென்னை, மே 26

தமிழ் அறிஞர் டாக்டர் மா. ராஜமாணிக்கனர் இன்று காலை காலமானர்.

டாக்டர் ராஜமாணிக்கனர் சிறந்த தமிழ் வரலாறு நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார். அவர் சிறந்த தமிழ் சொற்பொழிவாளராகவும் விளங்கினர்.

விக்ரேஸ் கிளை ஸ்தாபன

திறப்பு விழா

எமது வாடிக்கைக்காரர்களின் நன்மைக்காக எமது ஸ்தாபனத்தின் கிளை ஒன்றை கீழ்க்காணும் விலாசத்தில் 2-6-67 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கவிருக்கிறேம். மேற்படி ஸ்தாபனத்தில்

* றேடியோ வேலைகளும்
* றிவைன்டிங் வேலைகளும்

செய்து கொடுக்கப்படும்.

றிவைன்டிங் வயர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

விக்ரேஸ்

23, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்.
"ஞானம்ஸ் பில்டிங்" 1800

சிங்கம் மார்க் சந்தனத் தைலம்

யாழ்ப்பாண பகுதி ஏஜண்ட்:

என். எம். எஸ். அன்ட் பிரதர்

கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

அறிவித்தல்

யாழ்ப்பாணம், மின்சாரநிலையவீதி, 27-ம்இலக்கக் 'குமாரசாமி' கட்டிடத்தில், புதியபஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் எமது புதிய கிளை ஸ்தாபனத்துக்கு அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

சி. வி. பாட்

'ஷெல்' மார்க் அலுமினியப் பாத்திரங்கள் தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

"இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே"
"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே."
— திருஞானசம்பந்த சுவாமிகள்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆண்டு வைகாசி மீ 13உ (27-5-67)

## ஏன் இந்தப் பரீட்சை?

சென்றவருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையின் முடிவுகள் சமீபத்தில் வெளியாகின. இப்பரீட்சை முடிவின் புள்ளி விபரங்களைப் பார்க்கையில் இப்பரீட்சை எதற்கு? பரீட்சையின் நோக்கம் என்ன என்ற கேள்விகளை எழுப்புவதாக உள்ளது.

இரண்டுலட்சத்து ஐம்பதினுயிரம் பரீட்சார்த்திகள் தோற்றிய இப்பரீட்சையில் அறுபதினுயிரம்பேர் மட்டுமே ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்கின்றனர். பல்கலைக்கழகத்தில் கல்விகற்க இடம்பெறக்கூடிய தகுதி பத்தாயிரம் மாணவர்களுக்கே கிடைத்திருக்கிறது. அதாவது பரீட்சைக்குத் தோற்றிய இரண்டரை லட்சம் மாணவர்களில் நான்கில் ஒரு பகுதியினர்தான் இப்பரீட்சைக்குத் தோற்றக்கூடிய ஓரளவு தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். இந்த இரண்டரை லட்சம் மாணவர்களில் உயர்கல்வி பெறக்கூடிய தகுதி பத்தாயிரம் மாணவர்களுக்கு மட்டுமே இருக்கிறது. இதுதான் இப்பரீட்சை முடிவுகள் எடுத்துக்காட்டும் விளக்கம். பரீட்சைக்குத் தோற்றிய மிகுதி மாணவர்கள் அனைவருக்கும் கல்வியூட்டிய ஆசிரியர்கள் தகுதி அற்றவர்கள்! இந்தப்பிள்ளைகளின் கல்விக்காக பெற்ருேரும் அரசாங்கமும் செலவுசெய்த பணம் வீண்!

இப்படியான முடிவுக்கு வருவது வெகு சுலபம். ஆனல் உண்மை நிலைமை என்ன? பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அதிகரிக்க பரீட்சையில் சித்திபெறுவோர் தொகையும் குறைந்து வருவதேன்? நாற்காலி உத்தியோகத்தை நம்பி பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை என்னும் தடையைக்கடப்பதையே பெரும்பாலும் நோக்கமாகக் கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை, வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னையைக் கருதி குறைவதேன்? பல்கலைக்கழக இடநெருக்கடிப் பிரச்னைக்கேற்ப, பல்கலைக்கழகப் படிப்புப் பெறக்கூடிய தகுதி பெறும் மாணவர்களின் தொகையும் குறைவதேன்?

வேலையில்லாத் திண்டாட்டம்; பல்கலைக் கழக இடநெருக்கடி ஆகிய மூலாதாரக் காரணங்களுக்காக, இரவும் பகலும் கஷ்டப்பட்டுப் படித்த மாணவர்களைப் பழிவாங்குவதும் தங்கள் பிள்ளைகளின் படிப்புக்காக பெரும் பணத்தைச் செலவிட்ட பெற்ருருக்கு கவலையை ஏற்படுத்துவதும் பெரும் அநியாயம்; பாவமும்கூட.

நாட்டின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய கல்வித்திட்டம்பற்றி ஆண்டுக்கணக்காகப் பேசப்படுகிறது. ஒன்றில் அந்தக் கல்வித் திட்டத்தைவிரைவில் கொண்டுவரவேண்டும்; இல்லையேல் பிள்ளைகளைப் பழிவாங்கும், சில பிள்ளைகளின் அருமருந்தன்ன உயிரையே பலி வாங்கிய இந்தப்பொது [illegible] கமான பரீட்சையை ஒழித்துக்கட்டவேண்டும்.

இன்று நேருஜி சிரார்த்ததினம்

# -நேரு என்ற மனிதனும் நேரு என்ற எழுத்தாளனும்-

— பேராசிரியர் ஹுமாயின் கபீர் —



ஜவஹர்லால் நேருவின் பூத சடலத்தைச் சுற்றி நெருப்புச் சுவாலை எழுந்தபோது, 'ஜவஹர் அமரரானர்' என்ற கோஷம் வானைப் பிளந்தது. இது ஒரு வீணன கோஷமன்று. அவர் தமது வாழ்நாளில் என்ன லட்சியங்களுக்காக வாழ்ந்தாரோ அவை வேருன்றி வளர்ந்து மனித உடமையோடு ஒன்றிவிட்டன. நீதியையும், நேர்மையையும், கலைகளையும், விஞ்ஞானத்தையும், அழகையும் வாய்மையையும் நெஞ்சாரக் காதலித்தார். வாலிபத்தின்மீது அன்பையும், ஆதரவையும் சொரிந்தார்; வயோதிபத்தின்மீது கவலையும், காருண்யமும் காட்டினர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு பெரும் சுதந்திரப் போராடி. கொடுமை, கொடுங்கோல்; பசி; வறுமை; அறியாமை, இச்சை — இவற்றிலிருந்து விடுதலைபெறப் போராடினர்.

அவர் வளர்த்த லட்சியங்கள் இன்று உலகில் உயிரோடு உலாவுகின்றன. அவற்றின் சிருஷ்டிகர்த்தாவான நேரு என்ற மனிதன் உலகத்திலுள்ள அரசியல் தலைவர்களும், வெகுஜனங்களும், கலைஞர்களும், விஞ்ஞானிகளும், பாலரும், விருத்தரும் கதறியழ எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். முக்கியமாக எழுத்தாளர்கள் ஒரு நண்பனை இழந்துவிட்டார்கள். பொதுவாழ்விலே அவர் ஓர் ஒப்பற்ற கலைஞனய் விளங்கினர். தாம் கற்பனைசெய்துகொண்ட உலகைச் சொல்லாலும் செயலாலும் சிருஷ்டிக்க முயன்ருர்.

ஓர் எழுத்தாளனிலுள்ள சிறப்புக் குணங்கள், அவன் உள்ளிருக்கும் மனிதனைக் காட்டும். ஒரு மனிதன் என்ற முறையிலும், ஆகையால் எழுத்தாளன் என்ற முறையிலும் நேருவின் மிகச் சிறந்த குணதிசயம் அவருடைய களங்கமற்ற நேர்மையே. அவருடைய சிந்தனைகள் அவருடைய எழுத்தில் பிரதிபலித்தன. அவருடைய மாண்பின் முழுமையைக் காட்டின.

அவருடைய அனுபவத்தில் எதிர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிற்கும் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்தார். மலைச்சாரல்களைக் கண்டு மனம் மகிழ்ந்தார். அந்தி வானத்தைக் கண்டு சொக்கினுர். அழகான வார்த்தையும் செயலும் அவரை ஆட்கொண்டன. இதுகளைப் பற்றி வனப்போடும் வன்மையோடும் எழுதினுர்.

ஆழ்ந்த நுண்ணுணர்வும், மானிட வாழ்க்கையில் பரவலான பற்றும் சேர்ந்து அவருடைய எழுத்துக்கு ஒரு தனித் தன்மையைக் கொடுத்தன. 'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற அவரது முதலாவது நூல் உலகத் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வர்ணிக்கிறது புவியியல், உயிரியல், வானியல் முதலியவற்றைப் பற்றி எழுதும்போது இடையிடையே அவரது சொந்த உணர்ச்சிகளும், அச்சங்களும், நம்பிக்கைகளும் மிளிர்கின்றன. வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் பிரபஞ்ச வாழ்க்கையுடன் பின்னிக் கலந்து காலங் கடந்த நித்தியரூபம் பெறுகின்றன.

'உலக சரித்திரக் காட்சிக'ளிலும் அதைத் தொடர்ந்துவந்த 'இந்தியா கண்டுபிடித்தமை'யும் அவ்விதமே தனிப்பட்ட மனிதனுக்கும் உலகுக்குமுள்ள தொடர்புகளையும் சிக்கல்களையும் சித்தரிக்கின்றன. முதலாவது நூலில் இறந்த காலத்தின் பவனிக் காட்சிகள் பளிச்சிட்டு மின்னுகின்றன. மயிர் கூச்சிடும் மனித சம்பவங்களுக்கூடே, தமது மறிய? சாலையில் வளரும் புஷ்பத்தைப் பற்றியோ அல்லது அதுபோன்ற வேறு சொந்த அனுபவத்தைப் பற்றியோ மனதைத் திறந்து காட்டி வர்ணிக்கிருர்.

'இந்தியா கண்டுபிடித்தமை'யில் நேரு தம்மையே கண்டுபிடித்துவிட்டார்.

'சுயசரிதை'யில் தான் நேரு எழுத்தாளனின் சிகரத்தை எட்டிப்பிடிக்கிருர். இந்திய தேசியப் போராட்டத்தைக் கூறும் இந்நூல் ஈடிணையற்றதாக விளங்குகிறது. மனித உணர்ச்சிகளின் விசித்திரப் போக்குகளையும், இந்தியாவின் எதிர்காலத்தைப் புனைந்தவர்களின் உள்ளக்கிடக்கைகளையும் அது தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. மனிதன் என்ற முறையிலும் எழுத்தாளன் என்ற முறையிலும் அது நேருவின் பற்பல குணதிசயங்களை விளக்குகிறது.

இயற்கையின் மாறுபட்ட கோலங்களில் அவர் கண்ட இன்பமும், வாழ்க்கை என்ற விளையாட்டில் அவர் கண்ட ஆனந்தமும் அவரது கலையுள்ளத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. அதேசமயத்தில் அவர் இவற்றிற்கப்பால் விலகி நின்றுகொண்டு வாழ்க்கைத் திரையை ஒரு விஞ்ஞானி போல அமைதியாகவும் அடக்கமாகவும் நோக்குகிருர். அவர் எழுதும் உணர்ச்சித் துடிப்புள்ள, சிறகெறிந்து பறக்கும் சொற்கள் அவர் ஓர் அற்புதமான கலைஞன் என்பதை பறைசாற்றுகின்றன.

இந்தியா ஒரு பெரும் எழுத்தாளனை இழந்துவிட்டது.

## தமிழில் டெலிபோன் டைரக்டரி
### விரைவில் அச்சாகும்

வெள்ளவத்தை, வெள்ளி தொலைபேசி வழிகாட்டி [டெலிபோன் டைரக்டரி] யை வெகு விரைவில் தமிழில் மொழி பெயர்ப்பதற்கெனப் பத்தொன்பது புதிய தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தலைமை அஞ்சல் அதிபரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் தற்பொழுது கொள்ளுப்பிட்டியிலுள்ள மொழிபெயர்ப்புத் திணைக்களத்தில் வேலைசெய்துவருகிருர்கள். பெரும்பாலும் இன்னும் இரண்டு மாதங்களுள் மொழிபெயர்ப்பு வேலை முற்ருக முடியுமென்றும் பின்னர் அச்சுக்குக் கொடுக்கவேண்டியதே என்றும் பிரதம மொழிபெயர்ப்பாளர் திரு. கே. குமாரசாமி தெரிவித்தார்.

# ஐயாறன் எழுதுவது

'இந்தியாவுக்கு யாத்திரை செய்வதைத் தடுப்பது தீங்காகும்' என்று கொட்டை எழுத்திலே 'சன்' பத்திரிகை தலைப்பிட்டு முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய துவேஷத்தைக் கிளப்பி, இந்தியாவுடன் எவ்வித உறவும் வைத்துக்கொள்வது தேசாபிமானமாகாதென்று பிரசாரங்கள் நடக்கும் இக்காலத்தில், அப்பத்திரிகை இப்படியும் ஒரு செய்தியை இவ்வளவு பெரிய தலைப்புடன் வெளியிட்டதைப் பார்க்க வியப்பாக இருந்தது. செய்தியைப் படித்தேன்.

திருச்சி, சென்னை இவ்விடங்களுக்கு விமான மூலம் செல்ல செலாவணித்தடைகளை மீண்டும் போடவேண்டாமென்றும், இல்லாவிட்டால், கள்ளத்தனங்கள் அதிகம் நடக்குமென்றும் நிதி அமைச்சு இலங்கை அரசாங்கத்துக்கு யோசனை கூறியது. பன்முறை இதைவற்றுத்தியும், மந்திரிசபை இந்த யோசனையை ஏற்கவில்லை. ஏன் தெரியமா? போக்குவரத்துஅமைச்சரான ஹுருல்லை வெளியிட்டுள்ள அறிக்கையில் இதற்கான பலகாரணங்களை விளக்கியுள்ளார்.

ஃ ஃ ஃ

[1] யாத்திரைத் தடைகளை மீண்டும் நாம் போட்டால், இந்தியரும் இந்திய விமானத்தில் மட்டுமே செல்லலாமென்று இந்தியா போட்டி உத்தரவு போடலாம். இதனல் இலங்கை விமானக்கள் காலியாகவே செல்லவேண்டியிருக்கும். சர்விஸ்களையும் குறைக்க நேரிடும். இதனல் இலங்கை விமான சேவைக்குப் பெரு நஷ்டமேற்படும்.

[2] கொழும்பிலிருந்து சென்னைக்கும். திருச்சிக்கும் விமான யாத்திரைத்தடைகளை நீக்கியபின், இலங்கை விமான சர்வீசுக்கு நல்ல வருமானமும், லாபமும் கிடைத்துள்ளது.

[3] விமான யாத்திரையைத் தடையின்றி அனுமதிப்பதால், இந்திய ரூபாயில் கள்ளமார்க்கட் அதிகம் நடப்பதாயும், இந்தி 'இறக்குமதிச் சரக்குகளுக்கு பட்டியலில் அதிக விலை போட்டுக் கள்ளம் செய்வதாகவும் சொல்லப்படுகிறது. ஆனல் யாத்திரைத்தடை இருந்த காலத்திலும் இந்தக்கள்ளங்கள் நடந்துதான்வந்தன. ஒரு சமயம் இந்திய ரூபாயின் மதிப்பு, செலாவணி மதிப்பைவிட இரட்டிப்பாகவும் இருந்தது.

[4] விமான மூலம் யாத்திரை செல்பவர் இந்தியப் புடவைகளைக் கொண்டுவருவதால், உள்நாட்டு நெசவுத் தொழிலுக்குப் பாதகமேற்படுகிறதென்று மற்ருெரு காரணம் கூறுகின்றனர். ஆனல் சுங்க அதிகாரிகள் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துள்ளதால், பெரிய அளவில் எதுவும் இந்தியாவிலிருந்து கொண்டுவர முடியாதபடி செய்திருக்கிருர்கள்.

இந்த நான்கு சரியான காரணங்களைக் கேட்டபின், பிரயாணத்தடை இனி மீண்டும் நம் அரசாங்கம்போடாதென்றே நம்புவோம்.

ஃ

தடை இருந்த காலத்தில் இலங்கை விமானம் எல்லாம் அநேகமாகக் காலியாகவே வரும். பெரும் நஷ்டம். ரயில் பிரயாணத்தில் இன்னும் தடைநீங்கவில்லை. அதனுல் ரயில்வே வருமானமும் குறைந்திருக்க வேண்டும். பிரதமர் நேரு இங்கு வந்திருந்தபோது, பிரயாணத் தடைகளை நீக்கவேண்டு

[3-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

மென்றும், அப்படிச் செய்தால் மற்றப் பிரச்னைகள் சுலபமாக நீங்க நல்ல சூழ்நிலை ஏற்படுமென்ருர்.

ஆனல் அவர் அப்படிக் கூறிவிட்டுச் சென்றதுதான் தாமதம் ஸ்ரீமதியின் அரசாங்கம் ரயில் பிரயாணத்துக்கும் தடைபோட்டு நேருவின் முகத்தில் அடித்தது. ரயில்வே வருமானம் குறைந்தாலும் மனிதரின் அடிப்படை யாத்திரை உரிமை பறிக்கப்பட்டாலும் இந்தியாவுடன் நட்பு உறவுகள் பலப்படக்கூடாதென்ற கொள்கையையே கண்மூடித்தனமாகச் சென்ற கூட்டு அரசாங்கம் கடைப்பிடித்தது. இந்த யாத்திரைத் தடையும் கூட, சென்ற தேர்தலில் அந்தக் கட்சியினர் தோற்றதற்கு ஒரு காரணமாகும்.

விமானத்திலே செல்வந்தர்கள்தான் செல்லமுடியும். மற்வர்கள் ரயிலில் தான் செல்லவேண்டும். ஆகவே ஏழைகளும் இந்தியா சென்று திரும்ப வசதியளிக்கும்முறையில்ரயில்வேயிலும் இலங்கையர் தடையின்றி முன்போல் ரிட்டன் டிக்கெட் பெற்றுச் சென்றுவரஏன் மந்திரி ஹுருல்ல உத்தரவிடப்படாது? அவர் அவ்விதம் செய்வதால், எளிய [illegible] நன் [illegible] வதுடன் நம் ரயில்வே வருமானத்தையும் அதிகரிக்க வழி செய்தவராவார்.

ஃ ஃ ஃ

ஒல்லை யாறி உள்ளம் ஒன்
றிக் கள்ளம் ஒழிந்து
வெய்ய,
சொல்லை யாறித் தூய்மை
செய்து காமவினை யகற்றி,
நல்லவாறே யுன்றன்
நாமம் நாவில் நவின்றேத்த,
வல்லவாறே வந்து நல்
காய் வலிவலமேயவனே.
— திருஞானசம்பந்த சுவாமிகள்.

[வலிவலத்திலே கோயில் கொண்டுள்ள எம்பெருமானே! தொல்லைகள் நீங்கி மனம் குவிந்து, ஆசாபாசங்கள் ஒழிந்து, உன் திருநாமத்தைச் சொல்ல எனக்கு அருள்செய்வாயாக]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன்சன்-பியேர்ஸன் பேச்சுவார்த்தைகள்

## மே.ஆசிய நிலைமையை விவாதித்தனர்

## அக்காபா வளைகுடாவினுள் இஸ்ரேல் எந்த நேரமும் பிரவேசிக்கலாம்

வாஷிங்டன், மே 26

மேற்கு ஆசிய நிலைமை பற்றிக் கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்ஸனுடன் சம்பாஷித்து விட்டு, நேற்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் நியூயோர்க் திரும்பினார். ஐந்து மணித்தியாலங்கள் அவர் பிரதமர் பியேர்ஸனுடன் ஒட்டாவாவில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

ஐ. நா. பந்தோபஸ்து சபைக் கூட்டம் பற்றி ஜோன்சன் பியேர்ஸனுடன் பேசினார். இஸ்ரேல்- ஐ அ. குடியரசு எல்லையில் திரும்பவும் ஐ. நா. சமாதானப் படை ஒன்றை நிறுவ வேண்டுமென்ற கருத்தையே கனடாப் பிரதமர் பியேர்ஸன் வலியுறுத்தினர்

அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கு ஆசியாவில் சமாதானத்தை நிலைநாட்ட ஐ. நா. மூலம் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக பிரிட்டிஷ் வெளியுறவு ராஜ்ய மந்திரி திரு. தொம்ப்ஸன் வாஷிங்டனில் அறிவித்துள்ளார். அமெரிக்காவில் தற்போது விஜயம் செய்துள்ள அவர், கடந்த இரு தினங்களாக அமெரிக்க ராஜாங்க வெளியுறவுக் காரியதரிசி திரு. டீன் ரஸ்க்குடனும், மற்றும் அமெரிக்கத் தலைவர்களுடனும் இடைவிடாத பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட பின்னரே இந்த அறிவிப்பைத் தெரிவித்தார்.

மேற்கு ஆசிய பகுதியில் ஐ. நா. கடற்படை ஒன்றை நிறுத்துவது பற்றி தொம்ப்ஸன் அமெரிக்கத் தலைவர்களுடன் ஆலோசித்ததாகத் தெரிகிறது.

### யுதாண்ட் திரும்பினார்

கெயிரோவில் நாஸருடன் தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு, நேற்று ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் நியுயோர்க் திரும்பினார். இஸ்ரேல் - ஐ. அ. குடியரசு எல்லையில் ஐ. நா. படையை நிறுத்துவதன் மூலம் அங்கு சமாதானத்தை நிலைநாட்ட வழி வகுக்கலாம் என்ற யுதாண்ட் யோசனையை நாஸர் சாதகமாக ஆலோசித்ததாகத் தெரிகிறது. இன்று பிற்பகல் யுதாண்ட் தமது பேச்சுவார்த்தை பற்றி ஐ. நா. பந்தோபஸ்து சபைக்குத் தெளிவு படுத்துவார்.

### மறுப்பு

பாலஸ்தீன் எல்லையில், காஸாப்பகுதிக்குள் இஸ்ரேல்துருப்புகள் அத்துமீறிப் பிரவேசிக்க எத்தனித்ததாகவும் ஐ. அ. குடியரசு துருப்புகளுக்கும் இஸ்ரேல் ரோந்துப்படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகவும் கெயிரோவில் வெளியிடப்பட்ட ஒரு செய்தியை இஸ்ரேல் மறுத்துள்ளது.

### ஐ. அ. குடியரசு எச்சரிக்கை

அக்காபா வளை குடாவினுள் இஸ்ரேல் பிரவேசித்தால், அது ஆக்கிரமிப்பாகக் கருதப்பட்டு முறியடிக்கப்படுமென ஐ. அ. குடியரசு வெளியுறவு மந்திரி திரு. மகமது பியாட் எச்சரித்துள்ளார்.

### இஸ்ரேல் போரிடும்

எயிலாத் துறைமுகத்தை ஐ. அ. குடியரசு பந்தனம் செய்தால், அதை எதிர்த்து இஸ்ரேல் போரிடும் என இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார். ஐ. அ குடியரசால் பந்தனஞ் செய்யப்பட்டுள்ள அக்காபா வளை குடாவுக்குள் இஸ்ரேல் கப்பல்கள் விரைவில் நுழையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல்- ஐ.அ. குடியரசு எல்லையில் மீண்டும் ஐ. நா. சமாதானப்படையை நிறுவ வேண்டும் என்று மாஸ்கோவில் தற்போது தங்கியுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் கருத்துத் தெரிவித்தார். ஆனால் அவருடைய கருத்துக்கு ரஷ்யாவிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை. ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடாத்திய திரு. பிரவுண், லண்டனுக்குப் புறப்படு முன், மீண்டும் அவரைச் சந்தித்துப் பேசுவார்.

### ரஷ்யா நிராகரித்தது

மேற்கு ஆசிய நிலைமைக்கு ஒரு தீர்வு காண நான்கு வல்லரசுகளான பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் சந்தித்துப் பேச வேண்டுமென்ற பிரான்சின் ஆலோசனையை ரஷ்யா நிராகரித்துள்ளது.

பாரிசில் பிரான்ஸ் ஜனாதிபதி டி கோல், பிரான்சிலுள்ள ஐ. அ. குடியரசுத் தூதுவரைச் சந்தித்து, மேற்கு ஆசியாவில் நெருக்கடியான நிலைமையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரினார்.

சைப்பிரஸ்சிலுள்ளகிரேக்க தளங்களை பிரிட்டிஷ் விமானங்கள் எந்த அரபுநாட்டுக்கு மெதிராகப் பாவிக்க சைப்பிரஸ் அனுமதிக்காது என சைப்பிரஸ் ஜனாதிபதி அதி மேற்றிராணியார் மக்காரியஸ் அறிவித்துள்ளார்.

### பீக்கிங்

பீக்கிங்கில் நடைபெற்ற மாபெரும் அணியொன்றில் பல்லாயிரக்கணக்கான சீன மக்கள் அரபு நாடுகளுக்கான தமது ஆதரவைப் பிரகடனப்படுத்தினர். 'பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களுக்கு உதவியளிக்கும் சோவியத் யூனியனுக்கும்' கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

### புதுடில்லி

இந்தியாவுக்கு எதிராக சில ஐ. அ. குடியரசுப் பத்திரிகைகளில் எழுதப்பட்டிருப்பது பற்றிப் பார்லிமெண்டில் கிளப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்திய வெளியுறவு மந்திரி திரு. சக்ளா, அப்பத்திரிகைகள் தெரிவிக்கும் கருத்துக்கள் நிச்சயமாக ஐ. அ. குடியரசின் அரசாங்க நிலையைப் பிரதிபலிப்பதாக இருக்க முடியாது எனக் கூறினார். என்றாலும், இது இந்தியாவுக்கு ஓரளவு மனவேதனையளிப்பதால் இதுபற்றி ஐ. அ. குடியரசுக்கு இந்தியா தெரியப்படுத்தும் என்றார் அவர்.

### அல்ஜீரியா

ஐ. அ. குடியரசுக்கு ஆதரவாக அல்ஜீரியா துருப்புகள் அனுப்புவதெனத் தீர்மானித்துள்ளது.

## இரட்டைக் கொரில்லாக்கள்

பிராங்பேர்ட், மே 26

மேற்கு ஜெர்மனியிலுள்ள பிராங்பேர்ட் மிருகசாலையில் இரட்டை கொரில்லாக் குட்டிகள் பிறந்துள்ளன. இரண்டும் பெண்குட்டிகளான அவை, சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைப்பட்டுள்ள போது, இரட்டைக் கொரில்லாக்கள் பிறப்பது இதுவே முதற்தடவையாகும்.

---

## ரஷ்ய விமானி மே. ஜெர்மனியில் தஞ்சம்

பொன், மே 26

ரஷ்ய 'மிக்' போர் விமானம் ஒன்று மேற்கு ஜெர்மனியில் வந்திறங்கியுள்ளது. விமானி உடன் கைப்பற்றப்பட்டார். ஆனால் அவர் மேற்கு ஜெர்மனியில் தஞ்சம் புகுந்துள்ளதாகப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

## மொரார்ஜி தேசாய் பட்ஜெட்டுக்கு வரவேற்பு

புதுடில்லி, மே 26

இந்திய லோகசபையில் நேற்று நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் சமர்ப்பித்த பட்ஜெட்டுக்குப் பொதுவாக நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

மோசமான ஒரு பொருளாதார நிலைமையில், ஆகச் சிறந்த முயற்சியை திரு. தேசாய் எடுத்துள்ளதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலால் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதைத் தொழிலதிபர்களும், தலைவர்களும் எதிர்த்துள்ளனர்.

தேயிலை, ரப்பர், சிகரெட் மீதான வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து திரும்பி வரும் இந்தியப் பிரஜைகளுக்குத் தொழில் வழங்கும் தொழிற்சாலைகளுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்படும்.

பாரதக் கம்பனிகள் தொடங்கும் ஹோட்டல்களுக்கு வரி விதிவிலக்கு முதல் எட்டு வருடங்களுக்கு அளிக்கப்படும்.

---

## அக்நூர் சம்பவம்

### இந்திய—பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகள்

ராவல்பிண்டி, மே 26

இந்திய—பாகிஸ்தான் எல்லையிலுள்ள அக்நூர் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிப் பாரத—பாகிஸ்தான் இராணுவத் தலைவர்கள் சந்தித்துப் பேசவிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உதவிக்கொமாண்டர்கள் நிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெறவில்லை. ஆகவே இப்போது மேஜர்-ஜெனரல் நிலையில் இரு நாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

## 'கலைஞர்களை விலைக்கு வாங்கி தமது பாரம்பரியத்தை காப்பாற்றுகின்றனர்'

### 'அமெரிக்க அனுபவம்' பற்றி உடுப்பிட்டி எம். பி.

குரும்பசிட்டி, வெள்ளி

''உலகப்போக்கினை மாற்றியமைக்க வல்ல சக்திகளான அமெரிக்க சோவியத் நாடுகளது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை அறிந்து நமது தேச அரசியலமைப்பு, பொருளாதார முன்னேற்றத்திற்கான ஸ்திரமான கொள்கைகளை அமைத்துக் கொள்ளவேண்டும். ஜனநாயக அடிப்படையிலான சமஷ்டி அரசியல் அமைப்பு அமெரிக்காவில் உண்டு. கூடிய அதிகாரங்கள் பெற்றவராக அமெரிக்க ஜனாதிபதி ஒருவரே விளங்குகின்றார். வெளிநாட்டுக் கொள்கை நிர்ணயம், யுத்த சேவை. ஆயுதப் படைப்பொறுப்புகள் ஜனாதிபதிவசம் மட்டும் உண்டு. வியட்னாம் குண்டு வீச்சுக்கு அமெரிக்க சபைகளில் பலர் விரோதமான கருத்துகள் கொண்டபோதிலும் தேசப் பெருமை காக்க நிதி ஒதுக்கி ஆதரவு கொடுக்கின்றனர்''

சுன்னாகம் பட்டினசபை ஆதரவில் நடைபெற்ற போயா தினக் கருத்தரங்கில் கலந்துகொண்ட உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ''அமெரிக்க நாட்டு பிரயாண அனுபவம்'' என்ற பொருள் பற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். இக் கருத்தரங்கு பட்டினசபை விளையாட்டரங்கில் நடைபெற்றது.

திரு.சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

''அமெரிக்காவில் சமஷ்டி ஆட்சி நிலவியபோதிலும் முற்போக்கான கருமங்களை மத்திய அரசு அமுலாக்கும் போது சில குறிப்பிட்ட மாகாணங்கள் விரோதமாக முட்டுக்கட்டைபோட்டுத் தடையாகக் காரியமாற்றுகின்றன. கென்னடி ஆட்சியின்போது நீக்ரோ மக்களுக்குக் கல்வி போன்ற துறைகளில் விசேஷ உரிமைகள் வழங்கப்பட்டது. தென்பகுதியில் மட்டும் இதற்குப் பலத்த எதிர்ப்பு நிலவியது. பஸ்சேவை, வீடமைப்பு, வறுமை ஒழிப்பு முதலிய துறைகளில் சில மாகாணங்கள் நீக்ரோ மக்களுக்கு அநீதி விளைவிப்பதால் மத்திய அரசு நல்ல முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் உள்ளது. இதனால் நாடு முழுவதும் பாதிக்கப்படுகின்றது. அமெரிக்க நாட்டுத் தேர்தல்களில் பணப் பலம் தான் அதிக செல்வாக்குப் பெறுகின்றது. நுட்பக்கலை வளர்ச்சியால் உலகிலேயே அதிக செல்வம் கொழித்த நாடாக விளங்குகின்றது. இவர்களது விண்வெளி ஆராய்ச்சி முயற்சிகள் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையானவையே.

தொழிலாளர்கள் தமது ஓய்வு நேரங்களை ஆபாசக் களியாட்ட நிகழ்ச்சிகளில் கழிக்கின்றனர். தமது கலை கலாச்சாரங்களை வளர்க்க நினைப்பதில்லை. தாமே சொந்த முயற்சியால் புதிய கலைகளை உருவாக்குவதில்லை. மற்றைய தேசக் கலை நிபுணர்களை விலைகொடுத்து வாங்கி தமது பாரம்பரியத்தைக் காப்பாற்றுகின்றனர்.


# வெற்றிடங்கள்

கல்வனைஸ்ட் வாளித் தொழிற்சாலையில் பயிற்சிபெற்று, வேலைசெய்ய 16—19 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தேவை.

தச்சுவேலை, மேசன்வேலை அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில்விண்ணப்பிக்கவும்.

## எல்பிஹெம் ஹவுஸ்

[illegible] :: :: தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "ராதாவை முதலில்சுட்டது எம். ஜி. ஆர். தான்"

— ராதாவின் வழக்கறிஞர்



## "இதை இப்பொழுதுதான் முதல்தடவையாக கேட்கிறேன்"

— எம். ஜி. ஆர்.

## சிவாஜி, ஜெமினியின்வயதுபற்றியும் எம். ஜி. ஆர். பதில்

— நமது விசேஷ நிருபர் — சென்னை, மே 26

**திரைப்பட நடிகர் எம. ஜி. ஆர் — எம. ஆர். ராதா வழக்கில் நேற்று எதிரிதரப்பு வழக்கறிஞர், நடிகர் எம. ஜி. ராமச்சந்திரனைக் குறுக்குவிசாரணை செய்கையில் திடீரென்று கேட்ட இரண்டொரு கேள்விகள் நீதிமன்றத்தில் சிறிது பரபரப்பையும சலசலப்பையும ஏற்படுத்தியது.**

''நீங்கள்தான் முதலில் ராதாவை சுட்டிருக்கிறீர்கள், அதிலிருந்துதான் இச்சம்பவம் ஆரம்பித்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்'' என்று ராதாவின் வழக்கறிஞர் வானமாமலை நடிகர் எம். ஜி, ஆரைக் கேட்டார். இதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற சமயத்தில் எம். ஜி. ஆர். அணிந்திருந்த ஷேர்ட்டிலும் வேட்டியிலும் பட்ட இரத்தக்கறை ராதாவினுடையதென்றும், அதை எம். ஜி. ஆரின் ஆட்கள் கழுவியிருக்கிறார்களென்றும் எதிரிதரப்பு வழக்கறிஞர் கூறியதையும் எம். ஜி, ஆர். மறுத்தார்.

எதிரிதரப்பு வழக்கறிஞரின் மற்றொரு கேள்விக்கு எம். ஜி. ஆர். பதிலளிக்கையில் தமக்கு 51 வயது என்றும் ஜெமினி கணேசன் தம்மைவிட வயது குறைந்தவராலும் படத்தில் தமது அண்ணனாக நடித்திருக்கிறாரென்றும் கூறினார்.

சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் எம். ஜி. ஆர்.— ராதா வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிராசிக்கியூஷன் தரப்பு முதலாவது சாட்சியான திரைப்பட நடிகர் எம். ஜி. ஆர். எதிரிதரப்பு வழக்கறிஞரால் தொடர்ந்து குறுக்கு விசாரணைசெய்யப்பட்டார்.

மிகவும் பலஹீனமாகக் காணப்பட்ட நடிகர் ராமச்சந்திரன் எதிரி தரப்பு வழக்கறிஞரின் கேள்விகளுக்குப் பதிலளித்துக்கொண்டிருக்கையில் நடிகர் எம். ஜி. ஆர். பின்புறம் திரும்பி குடிக்கத் தண்ணீர் வேண்டுமென சைகைமூலம் கேட்டார். தொண்டை கரகரத்து இருமிக்கொண்டும் பலஹீனம் காரணமாக இளைத்துக் கொண்டுமிருந்த நடிகர் எம். ஜி. ஆர். தண்ணீர் குடித்ததும் இருமல், இளைப்புக்காரணமாக தண்ணீர் மூக்கு வழியாக வெளியே வரத் தொடங்கியது. மிகவும் களைப்படைந்து மூச்சுவிடக் கஷ்டப்பட்ட எம். ஜி. ஆர். ஒரு கையினால் நெஞ்சை அமர்த்திப் பிடித்துக்கொண்டார்.

எம். ஜி. ஆரை சிறிது நேரம் ஓய்வு எடுக்க அனுமதியளித்த நீதவான் அவசியமானால் குறுக்குவிசாரணையை அடுத்த தினத்துக்கு ஒத்திவைக்கலாம் என்றும் யோசனை தெரிவித்தார். ஆனால் எம். ஜி. ஆர். தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டு எதிரிதரப்பு வழக்கறிஞரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாரானார்.

### "முதலில் சுட்டது நீங்கள்தான்"

நடிகர் ராதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் என். டி. வானமாமலை, எம். ஜி, ராமச்சந்திரனைத் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார்.

வழக்கறிஞர்;- நீங்கள்தான் முதலில் நடிகர் ராதாவைச் சுட்டிருக்கிறீர்களென்றும் அதிலிருந்துதான் இச்சம்பவம் ஆரம்பித்திருக்கிறதென்றும் நான்கூறுகிறேன்?

எம். ஜி. ஆர். இதை மறுத்தார்.

வழக்கறிஞர்:- சூட்டுச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் அச்சமயத்தில் நீங்கள் (எம். ஜி. ஆர்.) அணிந்திருந்த சேர்ட்டிலும் வேட்டியிலும் ராதாவின் இரத்தக்கறை இருந்தது என்று நான் கூறுகிறேன். அந்த உடைகளில் இரத்தக்கறையிருந்தால் அது ராதாவின் இரத்தக்கறை என்பதை அரசாங்க ரசாயன பரிசோதகர் கண்டுபிடித்துவிடுவார் என்பதை உங்கள் ஆட்கள் அந்த சேர்ட்டையும் வேட்டியையும் தண்ணீரில் சுழுவி இரத்தக்கறையை நீக்கிவிட்டனர் என்றும் நான் கூறுகிறேன்.

எதிரிதரப்பு வழக்கறிஞரின் இந்தத் திடீர்க்கேள்வி நீதிமன்றத்தில் சிறிதுநேரம் சிறிய பரபரப்பையும் சலசலப்பையும் ஏற்படுததியது.

எம். ஜி. ஆர் : இது உங்கள் [வழக்கறிஞர்] யோசனையாக இருக்கலாம். ஆனால் அதில் உண்மையில்லை.

குறுக்குவிசாரணையில் நடிகர் எம். ஜி. ஆர். மேலும் சாட்சியமளிக்கையில், ''எனது வேட்டியையும் சேர்ட்டையும் பொலிஸார் கொண்டுசென்றார்கள் என்பது சம்பவம் நடந்த இரண்டுவாரங்களின்பின் எனது மனைவி உன்னிடம் தெரிவித்தபோதுதான் எனக்குத் தெரியும்'' என்றார்.

வழக்கறிஞர்:- உங்கள் உடைகள் கழுவப்பட்டிருந்தன என்பது உங்கள் [எம். ஜி. ஆர்.] சொந்த வைத்தியர் டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியத்துக்குத் தெரியும் என்று நான் கூறுகிறேன்.

இதையும் எம். ஜி. ஆர். மறுத்தார்.

வழக்கறிஞர்- இரத்தக் கறைகளைக் கண்டுபிடிக்க முடியாதபடி உடைகள் கழுவப்பட்டிருந்தன என்று அவர் உங்களிடம் சொன்னாரா?

எம். ஜி. ஆர்.- உடைகள் கழுவப்பட்டிருந்தன என்றுமட்டும்தான் அவர் என்னிடம் கூறினார்.

### வேண்டுமென்றே மறைக்கவில்லை

உடைகள் பற்றி சம்பவம் நடந்த இருவாரங்களின் பின் தமது மனைவிதான் முதல்தடவையாகத் தம்மிடம் கூறியதாக நடிகர் எம். ஜீ. ராமச்சந்திரன் முதலில் கூறியதுபற்றி வழக்கறிஞர் குறிப்பிட்டு இப்பொழுது தமது வைத்தியரும் அதுபற்றிக்கூறியதாகக் கூறுவது வேண்டுமென்றே சாட்சி, உண்மையை மறைக்கிறார்'' என்று வழக்கறிஞர் கூறினார்.

இதற்கு எம். ஜி. ஆர். பதிலளிக்கையில் ''உண்மையை வேண்டுமென்றே மறைப்பதில்லை. சில சமயங்களில் உண்மைகள் மனதைவிட்டு மறைந்துவிடுகின்றன'' என்றார்.

### ரிவால்வரும் எடுக்கப்பட்டது

எம். ஜி. ஆர். தமது சாட்சியத்தில் மேலும் குறிப்பிட்டதாவது;-

அந்த சூட்டுச் சம்பவத்தில் உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் ரிவால்வருடன் என்னுடைய ரிவால்வரும் பொலிசாரால் எடுத்துச் செல்லப்பட்டதாக நான் கேள்வியுற்றேன். ஆனால் அதுபற்றி நான் யாரிடமும் கேட்கவில்லை.

இந்தவழக்கின் முக்கிய சாட்சியான திரைப்படத் தயாரிப்பாளர் கே. வாசுவ

## "ராதா தம்மைச்சுட்டு விட்டதாகக்கூறினாரா?"

இந்தக்கட்டத்தில் தான் ராதாவைச்சுட்டது பற்றிய கேள்வியை எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டார்.

வழக்:- நீங்கள் தான் அவ்வரை [ராதாவை] முதலில் சுட்டதாக ராதாகுற்றம் சாட்டியதாக யாராவது உங்களிடம் கூறினர்களா?

எம். ஜி. ஆர்.:- இதை இப்பொழுதுதான் முதல் தடவையாக உங்களிடமிருந்து கேள்விப்படுகிறேன்.

நடிகர் எம். ஜி, ஆர். மேலும் தமது சாட்சியத்தில் தெரிவித்தாவது:-

நான்ஒரு ரிவால்வர் வைத்திருக்கிறேன். நன்றாகச் சுடுவதற்கு எனக்கு ஓரளவு தெரியும்.

### என் படங்களிலும சாணம அடிக்கின்றனர்

சென்னையிலிருந்து வெளியாகும் தமிழ் வாரப்பத்திரிகை யொன்றில் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு எதிராக வெளிவந்த ஒரு கட்டுரை பற்றி வழக்கறிஞர் குறிப்பிட்டார். இதர நடிகர்களின் திரைப்பட சுவரொட்டிகள் மீது சாணம் அடிக்கும் இயக்கத்தை ஆரம்பித்தவர் எம். ஜி. ராமச்சந்திரன் தான் என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது உண்மைதானா? என்று வழக்கறிஞர் கேட்டார்.

எம். ஜி. ஆர். :- சுவரொட்டிகள் மீது சாணம் அடிக்கப்படுவது எனக்குத் தெரியும் எனது படத்தின் சுவரொட்டிகளில் கூட சாணம் அடிக்கப்பட்டிருப்பதை நான் அறிவேன். இது போன்ற செயல்களை நான் கண்டித்திருக்கிறேன். நான் தான் இதை ஏற்படுத்தினேன் என்று சொல்வது உண்மையல்ல.

டனே அல்லது தமது தமையனார் சக்கரபாணியுடனோ அல்லது தமது காரியதரிசியுடனோ இவ்வழக்குபற்றி ஆலோசனை செய்யவில்லையென்றும் விவாதிக்கவில்லையென்றும் நடிகர் எம். ஜி. ஆர். கூறினார்.

### 50 வயது தாண்டிய கிழட்டுக் காதலன்

அதே பத்திரிகையில் '50 வயதைத் தாண்டிய கிழட்டுக் காதலன்' என்ற தலைப்பில் வெளிவந்திருந்த ஓர் அம்சத்தை வழக்கறிஞர்குறிப்பிட்டு 'இதைப் பற்றி நீங்கள் [எம். ஜி. ஆர்.] எவ்வித ஆட்சேபமும் கொள்ளவில்லையா?' என்று கேட்டார்.

எம். ஜி. ஆர்.; எனக்கு ஐம்பத்தியொரு வயதானாலும், அந்தக் கட்டுரை என் தொழில துறையைப்பாதிக்கவில்லையாதலால் நான் அது பற்றி ஆட்சேபம் எடுத்துக் கொள்ளவில்லை.

வழக்; நடிகர் சிவாஜி கணேசன் உங்களைவிட வயதில் இளையவரா?—எம். ஜி. ஆர்.-ஆம்.

வழக்: எத்தனை வயது இளமை.-எம். ஜி. ஆர்— எனக்குத் தெரியாது; அதை நான் அறிந்துகொள்ளவும் விரும்பவில்லை.

வழக்: ஜெமினி கணேசன் உங்களைவிட இளையவரா? நீங்கள் அவருடன் ஒரே படத்தில் நடித்திருக்கிறீர்களா?

எம். ஜி. ஆர்.: அவர் என்னைவிட இளையவர்தான். அவர் என்னைவிட வயதில் இளையவராக இருந்தாலும் படத்தில் எனது மூத்த சகோதரனாகநடித்திருக்கிறார். [நீதிமன்றத்தில் சிரிப்பு.[

இதற்குமுன் நீதிமன்றத்தில் நடிகர் எம். ஜி, ராமச்சந்திரனின் சொந்த வைத்தியர் டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம் நீதிமன்றத்தில் சமூகமளித்திருப்பதற்கு எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபம் தெரிவித்தார். அவர் இவ்வழக்கில் ஒருசாட்சியாகவரவிருக்கிறாரென்றும் எதிரிதரப்பு வழக்கறிஞர் கூறினார்.

### ராதாவும எம. ஜி. ஆரும

இவ்வழக்கு நேற்று இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் சரியான நேரத்துக்கு நீதிமன்றத்துக்கு வந்துசேர்ந்தார். புதிய தெம்புடன்அவர் காணப்பட்டபோதிலும் அவரது குரல்

[1-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

ஹீனமாகவே இருந்தது. நீதிமன்றத்திற்கு நடிகர் திரு. எம், ஆர். ராதா அரைமணி நேரம் தாமதமாகவே வந்தாலும் வழமைபோல் உற்சாகத்துடனேயே காணப்பட்டார். எனினும் அவரும் பலஹீனமாகவேகாணப்பட்டார். விசாரணை முடிந்து எம். ஜி. ஆர். களைப்புடன் நோயாளிபோல் வெளியே வந்தபோது வெளியே திரண்டிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் அமைதியாக திரு. ராதா வெளியே வந்து பாதுகாப்புடன் இரகசியமாகவே அங்கிருந்து கொண்டுசெல்லப்பட்டார்.

### களவு

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் அன்னங்கை வட்டாரத்தில் சில நாட்களாக களவுகள் நடைபெற்றன. அண்மையில் திருமதி வேலாயுதம் என்பவரின் வீட்டின் பின்பக்கச் சுவரை உடைத்து துணிகளும், பாத்திரங்களும் களவாடப்பட்டதாம்.

### இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**சனி 27 - 5 - 67**

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 வயலின், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

உங்கள் அபிமான C. W. E.
பிடவை மாளிகை
"பொகுமால்ஸ்"
புதிய நவநாகரீக டிசைன்களில்
C. W. E. சித்தைகளையும்
மற்றும்
பலவிதமான பிடவைகளையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விரையுங்கள்
பொகுமால்ஸ்
49, பிரதானவீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## கல்வி

வகுப்புக்கள்
கலை, விஞ்ஞானம், வர்த்தகம், சிங்களம் ஆகியவற்றுடன் ஆங்கிலமும் சிறந்த வழிகளில் தேர்ச்சிஅடைந்த ஆசிரியர்களால் கற்பிக்கப் பட்டுவருகிறது. G. C. E. சாதாரண உயர்தர மாணவர்களும் ஏனையோரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பிக்கவும். கணேசன் கல்விநிலையம், அளவெட்டி. 1848

## வாடகைக்கு

கடையின் பகுதி:
எமது ஸ்தாபனத்தில் சிகரெட்டு, வெற்றிலை விற்பனை செய்யும் பகுதி வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும். சுவர்ண ஹோட்டல், 190, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1853

## வைத்தியம்

தொய்வு, க்சம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கல்வி

வகுப்புகள்:
குரு வித்தியாலய பிரவேச பரீட்சைக்கான [பலாலி பயிற்சிக்கல்லூரி] ஆங்கிலம், தூயகணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், மனையியல் வகுப்புக்கள் விசேட விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் / பிரதானவீதி, முள்ளியவளை. 1851

வகுப்புக்கள்:
வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சை பயிற்றப் பட்ட ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப் படும். பெண்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1850

வகுப்புகள்!
''சிறந்த ஆசிரியைகளால் நடனம், பாலர்வகுப்பு [Montessori] தையல், நுண்முறை வெட்டு [Scinetific Cutting out] பேன்றவை திறம்பட நடத்தப்படுகின்றன. பார்வையிட்டு திருப்திகரமாக இருந்தால் பெண் பிள்ளைகளைச் சேர்த்துவிடுங்கள். வடமராட்சி மாதர் கலாமன்றம், நெல்லியடி''. 1858

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
SON OF
ZORRO
(Serial)

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
STRANGE BED-FELLOWS
9-45 p. m.
பியார் - கி - பியாஸ்
முதல் சினிமாஸ்கோப்
ஹிந்திப் படம்

## தேவை

ஆசிரியர்
யாழ்ப்பாணத்திலும், ஏனைய இடங்களிலும் ஆரம்பிக்கவிருக்கும் எமது நிலையத்தின் கிளைகளில், விஞ்ஞானம், கணிதவகைகள், கற்பிப்பதற்கு, G. C. E. உயர்தரம், H. S. C. படித்த ஆசிரியர்கள் உடனே தேவை. விண்ணப்பிக்கவும். கணேசன் கல்விநிலையம், அளவெட்டி. 1847

ஆசிரியர்:
அரசாங்க நுண்கலை கல்லூரி அல்லது வேறேதாவது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் [ஆங்கிலமும் தமிழும்] பயிற்சி பெற்ற கலை அல்லது கலையும் கைத்தொழிலும் ஆசிரியர் தேவை. விண்ணப்பிக்கவும். அதிபர், நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை, கைதடி. 1857

ஆசிரியை:
துணை ஆசிரியைகள் + பணப்பொறுப்பாளர்கள் தேவை. சிறிய உரொக்கப் பிணை செலுத்தக்கூடியவர்கள் 1-6-67க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், சிறுவர்பாடசாலை, 422, கே. கே. எஸ். ரேட், வண்ணார் பண்ணை. 1856

## இன்று

யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஞானசம்பந்தர் குருபூசை இரண்டாம் நாள் விழாவான இன்று காலை ஆதீன குருமூர்த்திகளின் சதஸும் பிற்பகல் மேளக்கச்சேரியும், மாலை ஆதீனத்திலிருந்து ஞானசம்பந்தப் பெருமான் உலப்போந்து நல்லைச் சிவன் கோவிலில் முத்துப் பல்லக்கு உற்பசவமும் நடைபெறும்.

உரும்பராய், வெள்ளி
உரும்பராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி ஜூன் மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளைப் பாடசாலையின் விளையாட்டு ஆசிரியர்களான திரு. எஸ். இரத்தினமும், திருமதி சோமசுந்தரமும் கவனிக்கின்றனர்.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
விடுமுறைதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர். - விஜயா
நடித்த
தாயின் மடியில்

## விற்பனைக்கு

காணி:
பருத்தித்துறை V. M வீதியில் இரத்தினசிங்கம் வழக்கறிஞர் இல்லத்துக்கு முன்னுல் குடியிருப்பு நிலம் 2 3/4 இரண்டேமுக்கால் பரப்பும் பருத்தித்துறை கடற்கரை வீதியில் தபாற்கந்தோருக்கு அருகாமையில் தற்கால வீட்டிற்கு அத்திவாரம் போட்டபடி 1 1/2 ஒன்றரை பரப்பு குடியிருப்பு நிலம் விலைக்கு உள்ளது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க. நவரத்தினசாமி, உபாத்தியாயர் இல்லம், ஓடக்கரை, பருத்தித்துறை. 1854

வீடும் வளவும் No 24, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் [ஒரு பரப்பும் 1/2 குழியும்] நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு அ. ரேமார், பலாலி சந்தி, காங்கேசன்துறை என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1855

தட்டச்சு:
ரேயல் ஆங்கில தட்டச்சு இயந்திரம் நல்ல நிலையில் விற்பனைக்கு உள்ளது. விலை இருநூற்று ஐம்பது. ஸ்ரீ சரஸமணி மருந்துச்சாலை, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை. 1852

## பாடசாலைகளுக்கு மின்சாரம்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி
புன்னாலைக்கட்டுவன், உரும்பராய் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படும் எனத் தெரிகிறது. இதற்கான பத்திரங்களை நிரப்பி அனுப்புமாறு அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## பழைய மாணவர் சங்கம்

கோப்பாய், வெள்ளி
கோப்பாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை தலைமையில் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. போஷகர்களாக், திரு. சி. கதிரவேற்பிள்ளை, கே. வி. சண்முகநாதன், பொ. தி. சம்பந்தன் ஆகியோரும் தலைவராக எஸ். சோமசுந்தரமும் காரியதரிசியாக கே. சதானந்தமும், தனுதிகாரியாக சி. நவரத்தினமும் தெர்வுசெய்யப்பட்டனர். 16 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

கோழித்தீன்
கோழித்தீன் தயாரிப்பதற்கு வேண்டிய மருந்துகள்- தானியங்கள்-தவிடு- மீன் எண்ணை தொகையாக எம்மிடம் ஆனி மாதம் 15-ம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மனேஜர், அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி.
1789

## அறிவித்தல்

திரு. V. S. அருளப்பா இளைப்பாறிய R. F. O. பெரியவிளான், இளவாலை எமது பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தேவையான விபரங்களை அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருணு ஏஜென்ஸீஸ்
அளவெட்டி. 1797

மனோகரா தியேட்டர் யாழ்ப்பாணம்
27-5-67 நிதிக்காட்சி
சிவாஜி — பானுமதி [நடித்த]
அறிவாளி நேரம்: 2-30, 6-30
ரிக்கற் கட்டணம் வழமைபோல். தியேட்டரில் ரிக்கற் பெற்றுக் கொள்ளலாம்.

4-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]
தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
குள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.

ஏ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணா

## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

[வரையறுளது]

[ 1933-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது ]

1-1-67-ல் அங்கத்தவர் தொகை 982
1-1-67-ல் இருப்பு ரூபா 396310
1966-ல் இளைப்பாறிய, இறந்த அங்கத்தவர்களுக்குச் சகாயமாக உதவிய தொகை ரூபா 34017.

**30 வயதுக்குட்பட்ட நிரந்தரமான ஆசிரியர் எவரும் அங்கத்தவராகச் சேரலாம்.**

- அங்கத்தவராகச் சேராதிருப்பவர்கள் சேர்ந்து தங்களுக்கும் தங்கள் உரிமையாளர்களுக்கும் சேமிப்பைத் தேடவும்.
- பிரவேசப் பத்திரம், விதிகள் என்பனவற்றிற்குக் கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பம் செய்யவும்.

33-வது வருடாந்தக் கூட்டம் 30-5-67 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

காரியதரிசி, வ. மா. ஆ. ச. நி. சங்கம்,
19, பழம் ரேட்டு, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

1796

உ
சிவமயம்

## திருமணவழைப்பு

அன்பரீர்,
நிகழும் பிலவங்க ஆண்டு வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் [2-6-1967] வெள்ளிக் கிழமை முற்பகல் 9-04 முதல் 10-16 வரையுமுள்ள கற்கடகலக்கின நல்லோரையில்,

| | |
|---|---|
| எமது மூத்த மகன் திருவளர்செல்வன் **சோமசுந்தரபாரதிக்கும்** [பல்வைத்தியத்துறை, பல்கலைக் கழகம், பேராதனை] | எமது மூத்த மகள் திருவளர்செல்வி **திருவரங்கநாயகிக்கும்** [ஸ்ரீரங்கேஸ்வரி] |

திருமணம் செய்யப் பெரியோர்கள் உறுதிசெய்திருப்பதால், நீங்கள் எல்லீரும் வந்து வைபவத்தைச் சிறப்பித்து மணமக்களை வாழ்த்திச் செல்லுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

சோ. இளமுருகனுர்
இ. பரமேசுவரி
புலவரகம்,
சோமசுந்தரப் புலவர் வீதி,
நவாலி, மானிப்பாய்.

சி. செ. பொன்னுத்துரை
பொ. இரத்தினம்
47, புதிய வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

10-5-67

குவளைக் கண்ணி கூறன் காண்க — அவளுந் தானு முடனே காண்க.

[வரவேற்பு மணமகன் இல்லத்தில் வெள்ளிக்கிழமை (2-6-67) மாலை 5 மணி முதல் [illegible]]

178
8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கணவரின் குதிரைச்சவுக்கு பத்மினியின் கைகளை பதம்பார்த்திருந்தது'

## டாக்டர் மனைவி கொலை வழக்கில் ஆசிரியை சாட்சியம்

காலி, வெள்ளி

''காலஞ்சென்ற திருமதி பத்மினி குலரத்தின ஒரு முறை தனது கைகளைக் காட்டினர். கையில் மோசமான தழும்புகள் பதிந்திருந்தன, முதலாம் எதிரியான டாக்டர் குலரத்தினவே அப்படி தழும்பு ஏற்படும் வண்ணம் குதிரைச் சவுக்கினல் அடித்திருந்தது தெரிய வந்தது'' என்று திருமதி மில்றெற் ஜெயவிக்கிரம நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் காலி மாஜிஸ்திரேட் கொலின் மெண்டிஸ் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

இவ் வழக்கில் திருமதி பத்மினி குலரத்தினவை ஏப்ரல் 9-ம் திகதி கொலை செய்ததாக அவரது கணவர் டாக்டர் டி.ஜி. டி. எஸ். குலரத்தின, டாக்டரின் தாயார் திருமதி லவுரு குலரத்தின, மற்றும் இரு வேலையாட்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

எதிரி தரப்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சிரேஷ்ட வழக்கறிஞராக ஆஜரானர். காலி மஹிந்தா கல்லூரி ஆசிரியை திருமதி மில்றெற் ஜெயவிக்கிரம தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

பௌத்தமாதர் சங்கத்தலைவியாக இருக்கிறேன். அத்துடன் குழந்தைகள் சங்கக் காரியதரிசியாகவும் இருக்கிறேன். திருமண காலத்திலிருந்து திருமதிபத்மினியைத் தெரியும். சமூக சேவைகளில் அவர் என்னுடன் சேர்ந்து கருமமாற்றியிருக்கிறர் மாதர் சங்கத்தின் உப தலைவிகளில் ஒருவராகவும் பத்மினி இருந்திருக்கிறர். திருமதி பத்மினி மாடியிலுள்ள ஒரு தனியறையில் வசித்து வந்தார்.

பத்மினியும் அவரது கணவர் குலரத்தினவும் ஒன்றாக இருந்து உணவு அருத்துவதில்லை. இதை பத்மினியே என்னிடம் சொல்லியிருக்கிறர். தன்னுடன் சேர்ந்து உணவு அருந்துவதற்கு வரக்கூடாதென தனது கணவர் குலரத்தின சொன்னதாக பத்மினி என்னிடம் கூறியிக்கிறர்.

### மாமியார் கொடுமை

தனது மாமியார், கணவர் ஆகியோர் தன்னைக் கொடுமைப்படுத்துவது பற்றி என்னிடம் பத்மினி கூறியிருக்கிறர். மாமியார் தனக்கு ஊறுகாயும், சீனிச்சம்பலும் தான் உணவுடன் அனுப்புவார் என்றும் சொன்னர். கணவர் தன்மீது விவாகரத்து வழக்குப் போட்டிருப்பதாக பத்மினி கூறினர். தனது பிள்ளைகளினலேயே வீட்டை விட்டு வெளியேற முடியாதிருப்பதாகவும் அவர் சொன்னர்.

குருநாகலையிலிருந்து ஒருவர் தன்னை நஞ்சூட்டிக் கொலை செய்வதற்காக கூட்டிவரப்பட்டாரெனக் கூறிய பத்மினி, தன்னுடன் கொழும்புக்கு வரும்படி என்னை வேண்டிக் கொண்டார். ஆனல் நான் அவருடன் கொழும்புக்குப் போக முடியாமல் போய்விட்டது.

---

### டாக்டர் விசாரிக்கப்படுவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய் கார் விபத்து விசாரணையின்போது பிரேத பரிசோதனைசெய்த டாக்டரை விசாரணை செய்வதற்காக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் அடுத்தமாதம் 9-ம் திகதிக்குஒத்திவைத்தார்.

## யாழ். புகையிலை ஏற்றுமதி: மீண்டும் ஏற்படுத்த வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் புகையிலை மலையாளத்துக்கு மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு வசதி செய்யப்படவேண்டுமென்று நேற்றுநடைபெற்ற மாவட்ட விவசாய இணைப்புக்குழுக் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது. இது பற்றி விரிவாக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவென கோப்பாய், நல்லூர், உடுவில்எம். பி. க்களைக்கொண்ட உப கமிட்டியொன்று நிறுவப்பட்டது,

கூட்டம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்றது.

மல்லாவி, ஒட்டிசுட்டான் ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையங்களும், அச்சுவேலியில் பொலிஸ் முகாமும் அமைக்கப்படவேண்டும் என்றும் கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மீன்பிடி அபிவிருத்தி விஷயங்களில் வடபகுதி புறக்கணிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுபற்றி ஆராய்ந்து ஆவன செய்வதற்காக ஒரு உபகமிட்டி நிறுவப்பட்டது.

### 1-ம எதிரிககு..:

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆர். கோபாலரத்தினம், சி. பரமசிவம்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ. குலநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார்.

கணேசன் மேலும் கூறிதாவது: 1ம் எதிரியை 10 வருடகாலமாகத் தெரியும். அவர் என் அயல் வீட்டுக்காரர். 2ம் எதிரியையும் எனக்குத் தெரியும். சம்பவம் நடந்த தினம் நடுவிலான் வல்லி வீட்டிற்கு ஐந்து பேர் அன்று காலை பொலிசில் செய்த முறைப்பாட்டையிட்டு சமாதானம் பேசச் சென்ருேம். அப்பொழுது இச்சம்பவம் நடந்தது 1ம், 2ம் எதிரிகள் பங்காகத் தொழில் நடத்தி வந்தனர்.

[விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது]

சரசாலை கொலை வழக்கில் 1ம் எதிரிக்கு 8 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2ம் எதிரி விடுதலை செய்யப்பட்டார். நேற்றுப் பிற்பகல் விசாரணை நடுவில் 1ம் எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

---

### தொழிலாளர்களுக்கு அதிக கிராக்கிப்படி

சென்னை, மே 26

சென்னைத்துறைமுகத் தொழிலாளரின் கிராக்கிப்படி அதிகரிக்கப் பட்டுள்ளது. இதன்பயனுக2,000 ஊழியர்கள் நன்மையடைவார்கள் இம்மாதம் முதலாம்திகதியிலிருந்து புதிய கிராக்கிப்படி ...

## கடல் கொந்தளிப்பில் வத்தை உடைந்தது

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவிலிருந்து ஊர்காவற்றுறையில் உள்ள சுருவில் என்னும் இடத்துக்கு மாடுகள் ஏற்றிவந்த வத்தை இன்று காலையில் நயினதீவிற்குத் தென்மேற்குத் திசையில் கொந்தளித்துக் கொண்டிருந்த கடலலைகளாலும் காற்றினலும் பெரிதும் பாதிக்கப்பட்டு அதன் வாரி உடைந்து வத்தையும் நொருங்கியது, நெடுந்தீவு நடுக்குறிச்சியைச் சேர்ந்த சந்தியாகு என்பவருக்குச் சொந்தமான இவ்வத்தை உடைந்த சமயம் அதனைக் கட்டிஇழுத்துக்கொண்டுவந்த மோட்டார்வள்ளச் சொந்தக்காரரும் அதைச் செலுத்தி வந்தவருமான ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மாசிலாமணி என்பவர் தமது சாமர்த்தியத்தால் வத்தையையும் மாடுகளையும் பிரயாணிகளையும் நயினதீவுக் கரையோரமாகக் கொண்டுசென்று கரைசேர்த்தாராம்.

---

### கோழிக்களவு: இருவர் விடுதலை

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கோழிக்களவுஒன்றுசம்பந்தமாக பொலிசாரால் கைது செய்யப்பட்ட மூவரில் இருவரை யாழ்ப்பாணம்மாஜிஸ்டிரேட் திரு. எம். எம். ஜமீல் நேற்றுவிடுதலைசெய்தார்.

நல்லூரில் நடைபெற்ற கோழிக்களவு சம்பந்தமாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் பகுதியினரால் பிரான்சிஸ்சேவியர், தங்கராசா, சுந்தரரெட்டி ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம்மாஜிஸ்டிரேட்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர் இவர்களில் தங்கராசா, சுந்தரரெட்டி ஆகிய இருவர் மீதும் போதிய சாட்சியங்கள் இல்லாததால் மாஜிஸ்டிரேட் அவர்கள் இருவரையும்விடுதலைசெய்தார். மற்ற சந்தேக நபர் தொடர்ந்து ரிமாண்டில் ...

### பிரச்னை தீர வழி

உடுவில், வெள்ளி

''இன்று தமிழ் பேசும் இளைஞர்களை எதிர்நோக்கி இருக்கும் முக்கிய பிரச்னைகளுள் மிகவும் கவலைக்குரியதும், வேதனைக்குரியதுமான பிரச்னை வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னையே. விஞ்ஞான ரீதியான திட்டங்களை அமைப்பதன் மூலமாகவும், பொருளாதாரத் திட்டத்தோடு எமது கல்வியை இணைப்பதன் மூலமாகவும் இப்பிரச்னையை நாம் தீர்த்துக் கொள்ளலாம்.

உடுவில் இளைஞர் மன்றத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஆசிரியர் திரு. கே. கந்தசாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருவாளர்கள் சிவா கணேசன், வி. கணேசன், எஸ். சுந்தரலிங்கம் ஆகியோரும் ...

ஆலயப்பிரவேசம

## ''பெண்கள் ஒத்துழைக்க முன்வரவேண்டும்''

யாழ்ப்பாணம், சனி

''இதுவரை எல்லோரும் சென்றுவழிபடும் இடங்களுக்கு சைவர்கள் யாவரும் புனிதத்துடன் தடையின்றிச்செல்லலாம். மதுபோதையுடன் ஆலயங்களுக்குப்போதல் கூடாது. கோவில் திருத்தொண்டுகள் புரிவோர்முகாமைக்காரரின் சம்மதத்துடன் அவ்வவ்வாலயங்களில் பணிபுரியலாம்'' என்று அகிலஇலங்கை இந்து மாமன்றத்தலைவரும், சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுமான திரு. சு. பாலசிங்கம் கூறினர். புங்குடுதீவு சைவமங்கையர் கழகத்தில்நடைபெற்ற ஆலயப்பிரவேசம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர்இவ்வாறு கூறினர்.

சமாதானமுறையில் ஆலயங்களைத்திறக்க யாவரும் உதவிபுரியவேண்டுமென்றும், இவ் விஷயத்தில் பிறமதத்தவர் தலையிடுவதை இந்துக்கள் ஆதரியாரென்றும், ஆலயங்களைத் திறந்துவிடும் விஷயத்தில் பெண்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும் திரு. பாலசிங்கம் கேட்டுக்கொண்டார். சைவமங்கையர்கழகத்தலைவி திருமதி க. தையல்நாயகி, செயலாளர் திருமதி மகாலட்சுமி மற்றும் அங்கத்தவர்கள் இந்து மாமன்றத்தின் யோசனைகளுக்கு ஆதரவு தெரிவித்தனர். புங்குடுதீவிலுள்ள பல ஆலயதர்மகர்த்தாக்களும் சைவப்பிரமுகர்களும் கூட்டத்துக்கு வந்திருந்தனர். ஆலயவிவகாரங்களைக் கவனிக்க திரு. க. செல்வத்துரையைத் தலைவராகவும், திருவாளர்கள் வே. பொன்னம்பலம், எஸ். சந்திரசேகரம் ஆகியோரை இணைச்செயலாளராகவும், திரு. க. ஏகாம்பரமூர்த்தியைத் தனதிகாரியாகவும் கொண்ட ஓர் உபகுழுவை இந்துமாமன்றம் அமைத்தது.

---

### பொலிஸார்சுட்டதில்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜியல்பூரில் 24 மணிநேர ஊரடங்குச்சட்டம் பிரகடனம்செய்யப்பட்டுள்ளது.

### நேற்று 9 பேர் மரணம்

நேற்று மேற்கு வங்காளத்தில் சில்லிகுறி பகுதியில் பொலிசார் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்றைத்தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 9 பேர் மாண்டதாக இப்பொழுது தகவல் கிடைத்துள்ளது. இறந்தவர்களில் 6 பேர் பெண்கள், இருவர் சிறுவர்.

---

### இலங்கரத்தின கெனமன் யாழ். வருவர்

குரும்பசிட்டி, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த கொலன்னவ எம். பி. திரு. ரி. பி. இலங்கரத்ன, கொழும்பு மத்திய தொகுதி எம். பி. திரு. பீட்டர்கெனமன் ஆகியோர் அடுத்தமாதம் 6ந்திகதி யாழ்ப்பாணம்வருகிறர்கள். தியாகிகந்தசாமி நினைவுதின விழாவில் பிரதமபேச்சாளர்களாககலந்துகொள்ளவிருக்கும் இவர்களுடன் வேறு சில இடதுசாரிக்கட்சிப் பிரமுகர்களும் இங்கு விஜயம் செய்யலாமெனத் தெரிகிறது. இந்த நினைவுதின விழா பருத்தித்துறைப் பகுதியில்நடைபெறஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### ஊர்வலம் சம்பந்மமான வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மூவர் மீது உத்தரவை மீறி ஊர்வலம் நடத்தியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நெத்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் உதவி பொலிஸ் சுப்பிரிண்டனின் உத்தரவை மீறி ஊர்வலம் நடத்தியதாக சுப்பிரமணியம், கந்தசாமி, சூடாமணி ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையைப் பார்ப்பதற்காக செஞ்சட்டை அணிந்த வாலிபர்கள் ஏராளமானேர் கோர்ட்டிற்கு வந்திருந்தனர். 2-ம் எதிரி சுகயீனமுற்றிருப்பதாக வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை எதிரிகள் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி சமர்ப்பித்து, விசாரணையை பின்போடும்படி மாஜிஸ்திரேட்டிடம் கேட்டுக்கொண்டார். மாஜிஸ்திரேட்விசாரணையை ஜூலை மாதம் 1-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

---

### பிரதமரின் கீழ்மாகாண விஜயம்

கொழும்பு, வியாழன்

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா 28-ம் திகதி கிழக்கு மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காகப் புறப்படுகின்றர்.

28-ம்திகதி காலையில்அவர் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் உரைநிகழ்த்துவார். பிறகு சித்தாண்டி முதலிய இடங்களுக்கு செல்வார். சித்தாண்டியில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தைத் றந்துவைப்பார்.

---

**CITY AND GUILDS**

Electrical Engineering Practice Preliminary Intermediate and Final. Evening classes condncted by Engineers Classes begin June 2. Apply in writing for details to:- Advertiser, Box No 1862 Eelanadu, Jaffna. 1862

### காலமானர்

பண்ணாகம் தெற்கு மாரிமுத்து பரமகுரு காலமானர். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், பண்டிதர் இராசகுரு, சற்குரு ''ஈழநாடு லிமிட்டெட்'' தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் தந்தையுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் நேற்று திருவடிநிலையில் நடைபெற்றன.

தகவல்: ப. சற்குரு. 1860

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org